பிரஸார்பாரதி
அகில இந்திய வானொலி, சென்னை
22 06 2024 **SATURDAY** 6 30 **PM**
வணக்கம் - மாநில செய்திகள்

<u>தலைப்புச் செய்திகள்</u>

1. தேசிய தேர்வு முகமையின் கட்டமைப்பை மேம்படுத்துவதற்காக இஸ்ரோ முன்னாள் தலைவர் டாக்டர் ராதாகிருஷ்ணன் தலைமையில் உயர்நிலை நிபுணர் குழு ஒன்றை மத்திய அரசு ஏற்படுத்தியுள்ளது.
2. கள்ளக்குறிச்சி கள்ளச்சாராய சம்பவத்திற்கு தமிழக முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் தான் முழுமையாக பொறுப்பேற்க வேண்டும் என்று மத்திய இணையமைச்சர் திரு. எல். முருகன் தெரிவித்துள்ளார்.
3. தமிழகத்தின் பேரூராட்சிப் பகுதிகளில் சேதமடைந்த சாலைகள் 315 கோடி ரூபாய் செலவில் மேம்படுத்தப்படும் என்று மாநில அரசு கூறியுள்ளது.
4. நீலகிரி, கோவை மாவட்டங்களுக்கு உட்பட்ட ஒரு சில பகுதிகளில் அடுத்த இருதினங்களுக்கு கன முதல் மிககனமழைக்கு வாய்ப்புள்ளதாக வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.
5. உலக கோப்பை வில்வித்தைப் போட்டியில் இந்தியா இன்று தங்கப்பதக்கம் வென்றது.

<<<<<>>>>>>

தேசிய தேர்வு முகமையின் கீழ் நடத்தப்படும் தேர்வுகள் வெளிப்படைத்தன்மையுடன் நடைபெறுவதை உறுதி செய்வதற்கான பரிந்துரைகளை வழங்குவதற்காக உயர்நிலை நிபுணர் குழு ஒன்றை மத்திய அரசு ஏற்படுத்தியுள்ளது.

இஸ்ரோ முன்னாள் தலைவர் டாக்டர் ராதாகிருஷ்ணன் இந்த உயர்நிலைக் குழுவிற்கு தலைவராக நியமிக்கப்பட்டுள்ளார்.

புதுதில்லி எய்ம்ஸ் மருத்துவமனையின் முன்னாள் இயக்குநர் டாக்டர் Randeep Guleria, சென்னை ஐஐடி பேராசிரியர் திரு. ராமமூர்த்தி உட்பட ஆறு பேர் இக்குழுவின் உறுப்பினர்களாக நியமிக்கப்பட்டுள்ளனர்.

கல்வித்துறையின் இணைச்செயலர் திரு. Govind Jaishwal உறுப்பினர் செயலராக நியமிக்கப்பட்டுள்ளதாக மத்திய அரசின் செய்திக்குறிப்பு தெரிவிக்கிறது.

இந்தக்குழு இரண்டு மாதங்களுக்குள் தங்களது அறிக்கையை சமர்ப்பிக்க வேண்டும் என்றும் கோரப்பட்டுள்ளதாக அந்த செய்திக்குறிப்பில் குறிப்பிடப்பட்டுள்ளது.

<<<<<>>>>>>

மாநிலங்களுக்கான நிதி பகிர்வினை மத்திய அரசு உரிய நேரத்தில் வழங்கி வருவதாக நிதியமைச்சர் திருமதி. நிர்மலா சீதாராமன் கூறியுள்ளார்.

இன்று புதுதில்லியில் பட்ஜெட்டுக்கு முந்தைய ஆலோசனைக் கூட்டத்தின் ஒரு பகுதியாக, மாநில நிதியமைச்சர்கள் பங்கேற்ற கூட்டத்தில் தலைமை வகித்து உரையாற்றினார்.

சரக்கு மற்றும் சேவை வரி இழப்பீட்டு நிலுவைத் தொகையும், மாநிலங்களுக்கு வழங்கப்படுவதாக அவர் தெரிவித்தார்.

மூலதன முதலீட்டிற்கான சிறப்பு நிதியுதவி திட்டத்தை மாநில அரசுகள் அதற்கான நெறிமுறைகளை பின்பற்றி பயன்படுத்திக் கொள்ள வேண்டும் என்றும் திருமதி. நிர்மலா சீதாராமன் கேட்டுக் கொண்டார்.

இந்தக் கூட்டத்தில் உரையாற்றிய தமிழக நிதியமைச்சர் திரு. தங்கம் தென்னரசு, பேரிடர் பாதித்த மாநிலங்களுக்கு கூடுதல் நிதியை மத்தியஅரசு ஒதுக்கீடு செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொண்டார்.

தமிழகத்தில் மழை வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் சீரமைப்புப் பணிகளை மேற்கொள்வதற்காக 3 ஆயிரம் கோடி ரூபாயை ஒதுக்கீடு செய்ய வேண்டும் என்றும் திரு. தங்கம் தென்னரசு வலியுறுத்தினார்.

<<<<<>>>>>>

கள்ளக்குறிச்சி கள்ளச்சாராய சம்பவத்திற்கு தமிழக முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் தான் முழுமையாக பொறுப்பேற்க வேண்டும் என்று மத்திய இணையமைச்சர் திரு. எல். முருகன் கூறியுள்ளார்.

இன்று நாமக்கல்லில் செய்தியாளர்களிடம் பேசுகையில் அவர் இவ்வாறு கூறினார்.

(சவுண்ட் பைட் - முருகன் (1) 38 செகண்ட்ஸ்)

தமிழகத்தின் வளர்ச்சிக்காக கடந்த பத்தாண்டுகளில் 11 லட்சம் கோடி ரூபாயை பிரதமர் திரு நரேந்திர மோடி வழங்கியுள்ளதாக அவர் தெரிவித்தார்.

(சவுண்ட் பைட் - முருகன் (2) 27 செகண்ட்ஸ்)

ஊடகங்கள் பொறுப்புணர்வுடன் செயல்பட வேண்டும் என்றும் திரு. முருகன் வலியுறுத்தினார்.

(சவுண்ட் பைட் - முருகன் (3) 27 செகண்ட்ஸ்)

இதற்கிடையே, கள்ளக்குறிச்சி கள்ளச்சாராய சம்பவத்தை கண்டித்து பிஜேபி சார்பில் மாநிலம் முழுவதும் இன்று கண்டன ஆர்ப்பாட்டங்கள் நடைபெற்றன.

<<<<<>>>>>

கள்ளக்குறிச்சி கள்ளச்சாராய சம்பவம் குறித்து சிபிஐ விசாரணைக்கு உத்தரவிட வேண்டும் என்று அஇஅதிமுக பொதுச் செயலாளர் திரு. எடப்பாடி பழனிசாமி மீண்டும் வலியுறுத்தியுள்ளார்.

இன்று சட்டப்பேரவையிலிருந்து வெளிநடப்பு செய்த பின்னர் செய்தியாளர்களிடம் பேசுகையில் அவர் இவ்வாறு கூறினார்.

மாநில அரசின் அலட்சியமே உயிரிழப்பு அதிகமானதற்கு காரணம் என்றும் திரு. எடப்பாடி பழனிசாமி குற்றம் சாட்டினார்.

<<<<<>>>>>

தமிழகத்தின் பேரூராட்சிப் பகுதிகளில் சேதமடைந்த சாலைகள் 315 கோடி ரூபாய் செலவில் மேம்படுத்தப்படும் என்று நகராட்சி நிர்வாகத்துறை அமைச்சர் திரு. கே.என். நேரு கூறியுள்ளார்.

இன்று பேரவையில் தமது துறை மானியக் கோரிக்கை மீதான விவாதத்திற்கு பதிலளித்து அவர் பேசினார்.

இந்த நிதியைப் பயன்படுத்தி, 575 கிலோமீட்டர் நீளமுள்ள சாலைகள் மேம்படுத்தப்படவுள்ளதாக அவர் தெரிவித்தார்.

திருச்செங்கோடு, கொல்லங்கோடு, சோளிங்கர் மற்றும் கம்பம் நகராட்சிகளில் 45 கோடி ரூபாய் செலவில் புதிய பேருந்து நிலையங்கள் அமைக்கப்படும் என்றும் திரு. கே.என். நேரு கூறினார்.

<<<<<>>>>>

தமிழகத்தில் 2 ஆயிரத்து 500 கிராம ஊராட்சிகளில் உள்ள மேய்க்கால் நிலங்களில் கசிவு நீர் குட்டைகள் மற்றும் மரம் நடுதல் போன்ற பணிகள் 400 கோடி ரூபாய் செலவில் மேற்கொள்ளப்படும் என்று ஊரக வளர்ச்சித்துறை அமைச்சர் திரு. ஐ. பெரியசாமி கூறியுள்ளார்.

இன்று பேரவையில் தமது துறை மானியக் கோரிக்கை மீதான விவாதத்திற்கு பதிலளித்து அவர் பேசினார்.

மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலைவாய்ப்பு உறுதி திட்டத்தின் கீழ், இந்தப் பணிகள் மேற்கொள்ளப்படும் என்றும் அவர் தெரிவித்தார்.

ஊரகப் பகுதிகளில் 10 எரிவாயு தகன மேடைகள் கட்டப்படும் என்றும் திரு. ஐ. பெரியசாமி கூறினார்.

<<<<<>>>>>

புதிய குற்றவியல் சட்டங்கள் 'குறித்த சிறப்பு கலந்துரையாடல் நிகழ்ச்சி சென்னை அகில இந்திய வானொலியில் நாளை ஒலிபரப்பாகிறது.

மாநில செய்திப் பிரிவு வழங்கும் இந்த நிகழ்ச்சியில் வழக்கறிஞர்கள் திரு. வசந்தகுமார், திருமதி. ஸ்மிருதி ஆனந்தன், ஊடகவியலாளர் சுமித்ரா ரத்னம் ஆகியோர் பங்கேற்கின்றனர்.

நாளை இரவு 8.30-மணிக்கு பிரதான அலைவரிசையில் ஒலிபரப்பாகவுள்ள இந்த நிகழ்ச்சியை மாநிலத்தில் உள்ள அனைத்து வானொலி நிலையங்களும் அஞ்சல் செய்யும்.

<<<<<>>>>>

தமிழகத்தின் ஒரு சில பகுதிகளில் அடுத்த 4 தினங்களுக்கு மழைக்கு வாய்ப்புள்ளதாக சென்னை வானிலை ஆய்வு மைய இயக்குநர் திரு. செந்தாமரைக் கண்ணன் கூறியுள்ளார்.

எமது செய்தியாளரிடம் பேசிய அவர், நீலகிரி, கோவை மாவட்டங்களுக்கு உட்பட்ட ஒரு சில பகுதிகளில் கனமழைக்கு வாய்ப்புள்ளதாக கூறினார்.

(சவுண்ட் பைட் - செந்தாமரை 55 செகண்ட்ஸ்)

<<<<<>>>>>

<u>மாவட்டச் செய்திகள்</u>

தருமபுரி மாவட்டம், வத்தல்மலையில் இந்தியன் வங்கியின் ஏடிஎம் மையத்தினை ஆட்சியர் திருமதி. சாந்தி இன்று திறந்து வைத்தார்.

<<<<<>>>>>

மயிலாடுதுறை மாவட்டம், சீர்காழியில் கல்லூரி மாணவிகள் பங்கேற்ற போதைப்பொருள் தடுப்பு விழிப்புணர்வு பேரணி இன்று நடைபெற்றது.

<<<<<>>>>>

திருச்சி மாவட்டத்தில் போதைப் பொருட்களுக்கு எதிரான கண்காணிப்பு நடவடிக்கைகள் தீவிரப்படுத்தப்பட்டுள்ளதாக ஆட்சியர் திரு. பிரதீப் குமார் கூறியுள்ளார்.

<<<<<>>>>>

பெரம்பலூர் மாவட்டத்தில் கடந்த ஆறு மாதங்களில் சட்டவிரோதமாக மது விற்பனை செய்தது மற்றும் பதுக்கி வைத்தது தொடர்பாக 829 பேர் கைது செய்யப்பட்டுள்ளதாக காவல்துறை கண்காணிப்பாளர் திருமதி. ஷியாமளா தேவி தெரிவித்துள்ளார்.

<<<<<>>>>>

நாட்டிலேயே முதல்முறையாக தூத்துக்குடி மாவட்டத்தில், செவித்திறன் குறைபாடு உடைய குழந்தைகளை கண்டறிவதற்கான திட்டம் தொடங்கப்பட்டுள்ளது.

<<<<<>>>>>

திருவாரூர் மாவட்டம், திருத்துறைப்பூண்டியில் தேசிய நெல் திருவிழா இன்று தொடங்கியது.

<<<<<>>>>>

<u>விளையாட்டுச் செய்திகள்</u>

உலக கோப்பை வில்வித்தைப் போட்டியில் இந்தியா இன்று தங்கப்பதக்கம் வென்றது

துருக்கியின் Antaliya-வில் நடைபெற்று வரும் இப்போட்டியின் மகளிர் குழுப் பிரிவு இறுதியாட்டத்தில் இந்தியா, 232 – 229 என்ற புள்ளிக்கணக்கில் Estonia-வை வென்று இப்பதக்கத்தை கைப்பற்றியது.

ஆடவர் ஒற்றையர் பிரிவில் Priyansh இறுதிச்சுற்றுக்கு முன்னேறியுள்ளார்.

<<<<<>>>>>

பிரிக்ஸ் விளையாட்டுப் போட்டிகளில் இந்தியா இன்று இரண்டு வெண்கலப்பதக்கங்களை வென்றது.

ரஷ்யாவின் **Kazan**–ல் நடைபெற்று வரும் இப்போட்டியின் வாள் வீச்சுப் பிரிவில் இந்தியா இப்பதக்கங்களை கைப்பற்றியது.

இப்போட்டியில் இதுவரை இந்தியா ஒரு தங்கம், 3 வெள்ளி, 14 வெண்கலப்பதக்கங்களை வென்று பதக்கப்பட்டியலில் 9-வது இடத்தில் உள்ளது.

<<<<<>>>>>

உலக கோப்பை டிவென்டி டிவென்டி கிரிக்கெட் போட்டியில், இந்தியா இன்று பங்களாதேஷை எதிர்கொள்கிறது.

Antigua-வில் நடைபெறவுள்ள இப்போட்டி இரவு 8 மணிக்கு தொடங்குகிறது.

<<<<<>>>>>>

Selangor மாஸ்டர்ஸ் கோல்ஃப் போட்டியில் இந்தியாவின் Rahil Gangiee பட்டம் வென்றார்.

<<<<<>>>>>>

பாரிஸ் ஒலிம்பிக் டென்னிஸ் போட்டியில் பங்கேற்க இந்தியாவின் சுமித் நாகல் தகுதி பெற்றுள்ளார்.

<<<<<END>>>>>>